**இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கூட்டுத்தாபனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமத்திற்கான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியமங்கள் – எல்கேஏஎஸ் 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள். | | |
| (அ) நியமத்தின் 79 (ஆ) பந்தியின் பிரகாரம் முழுமையாக | பொருள் மெய்மையாய்வு சபையால் முழுமையாக | கணக்கீட்டு நியமங்களின் |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமானத்தேய்விடப்பட்ட போதிலும் தற்போதும் பயன்படுத்தப்படுகின்ற ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மொத்த கொண்டுசெல்லும் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டு தற்போதும் பயன்பாட்டில் உள்ள 01 தளபாடம் மற்றும் பொருத்து, 61 அலுவலக உபகரணங்கள், 25 கணனிகள் மற்றும் அச்சிடல் இயந்திரம் மற்றும் 11 மென்பொருள் பொதிகள் ஆகியவற்றின் மொத்த கொண்டுசெல்லும் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பெறுமானத்தேய்விடப்பட்டதாக இனங்காணப்பட்ட பல சொத்துக்கள் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனினும், அவை மீள்மதிப்பீடு செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும். | பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நியமத்தின் 55 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு சொத்தின் பெறுமானத்தேய்வு அது பயன்பாட்டிற்குக் கிடைக்கும் போது தொடங்குகிறதுடன் சொத்து விற்பனை அல்லது அகற்றல் என வகைப்படுத்தப்பட்ட திகதியின் முந்தைய திகதியில் நிறுத்தப்படுகிறது. எனினும், மீளாய்வாண்டில் கொள்வனவு செய்த 21 கணனி மற்றும் அச்சிடல் இயந்திர உருப்படிகள், 31 தளபாடம் மற்றும் பொருத்து உருப்படிகள் மற்றும் 10 அலுவலக உபகரண உருப்படிகள் தொடர்பாக அகற்றப்பட்ட ஆண்டில் கூட்டுத்தாபனம் பெறுமானத்தேய்வை அறவிடாமல் கொள்வனவு செய்த ஆண்டில் முழுமையாக பெறுமானத்தேய்வை அறவிட்டுள்ளது. அதன் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு மீளாய்வாண்டில் ரூபா 2,779,165 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | கணக்கீட்டுக் கொள்கை 3.2 இன் கீழ், சொத்துக்கள் கொள்வனவு செய்த ஆண்டு, அவை கொள்வனவு செய்யப்பட்ட மாதத்தைப் பொருட்படுத்தாமல் பெறுமானத்தேய்விற்காக முழுமையாகக் கருத்தில் கொள்ளப்படுவதுடன் அகற்றும் ஆண்டு பெறுமானத்தேய்விற்காக கருத்தில் கொள்ளப்படுவதில்லை.<br><br>அதன் பிரகாரம் கணக்கீட்டுக் கொள்கை 3.2 இன் பிரகாரம் உருப்படிகளுக்கு அதே நடைமுறை பின்பற்றப்பட்டது. | -மேற்படி- |

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான வட்டி சரியாக | நிலையான வைப்பு 2022 ஆம் ஆண்டிலிருந்து | ஆண்டுக்கான வட்டி வருமானம் சரியாக |

| | | | |
|---|---|---|---|
| | கணிப்பிடப்பட்டிருக்காததால் மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானம் ரூபா 2,103,969 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது, பெற வேண்டிய வட்டி ரூபா 864,214 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் பணிக்கொடை நிதிய கணக்கு தொடர்பான திறைசேரி உண்டியல் மீதி ரூபா 1,239,755 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இருந்ததுடன் கணக்கீட்டுக் காலத்தில் வட்டி விகிதம் வெளிப்படுத்தப்படவில்லை. எனவே, வட்டி விகிதத்தை கணிப்பிடுவதற்கு அதே வட்டி விகிதம் கருத்தில் கொள்ளப்பட்டது. எனினும், 2024 ஆம் ஆண்டில் இது சீர்செய்யப்படும். | கணிப்பிடப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 ஆம் நிதியாண்டு தொடர்பான ரூபா 987,422 தொகையான வருமானம் மீளாய்வாண்டில் ஏற்றுமதி கொடுப்பனவு காப்புறுதி கொள்கையின் மொத்த எழுதப்பட்ட தவணைப்பணத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், மீளாய்வாண்டில் ஏற்றுமதி கொடுப்பனவு காப்புறுதி கொள்கையின் மொத்த எழுதப்பட்ட தவணைப்பணம் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | இது 2024 ஆம் ஆண்டில் சீர்செய்யப்படும். | மீளாய்வாண்டு தொடர்பான வருமானம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | 09 ஏற்றுமதியாளர்கள் தொடர்பாக பெறப்படாத ரூபா 13,116,062 தவணைப்பணம் ரூபா 8,717,960 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததால் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஏற்றுமதி கொடுப்பனவு காப்புறுதி கொள்கை தொடர்பாக பெறப்படாத தவணைப்பணம் ரூபா 4,398,102 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது, | இது 2024 ஆம் ஆண்டில் சீர்செய்யப்படும். | சீராக்கங்கள் சரியாக செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | 2023 ஆம் ஆண்டுக்கான ரூபா 60,366,742 தொகையான தேறிய உரிமைக்கோரல்கள் நிதிக்கூற்றுக்களில் ரூபா 62,831,747 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததால் மீளாய்வாண்டிற்கான தேறிய உரிமைக்கோரல்கள் ரூபா 2,465,005 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. | இது 2024 ஆம் ஆண்டில் சீர்செய்யப்படும். | மீளாய்வாண்டு தொடர்பான செலவினங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | முன்னைய ஆண்டுகளுடன் தொடர்புடைய உரிமைகோரப்பட்டிருக்காத மற்றும் செலுத்தப்பட்டு | 2024 ஆம் ஆண்டில் ஏற்பாடு இறுதி செய்யப்பட்டு நாளதுவரையாக்கப்படும். | ஏற்பாடுகள் சரியாக செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிராகரிக்கப்பட்டிருந்த ரூபா 306,856,067 கூட்டுமொத்தமான தொகை 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்கால உரிமைகோரல்களுக்கான ஏற்பாட்டு மீதியில் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே, 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான எதிர்கால உரிமைகோரல்களுக்கான ஏற்பாடு ரூபா 306,856,067 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்கள் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | வரிவிதிக்கத்தக்க வருமானம் சரியாக கணிப்பிடப்பட்டிருக்காததால் மீளாய்வாண்டுக்கான வருமான வரி நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,468,303 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இது 2024 ஆம் ஆண்டில் சீர்செய்யப்படும். | மீளாய்வாண்டிற்கான வருமான வரி சரியாக கணிப்பிடப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்

| | விடயம் | நிதிக்கூற்றுக் களின் பிரகாரம் ரூபா | தொடர்புடைய ஏட்டின் பிரகாரம் ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | செலுத்தப் பட்ட உரிமைக் கோரல் | 40,574,275 | 40,902,576 | 328,301 | பதிலளிக்கப்படவில்லை. | தொடர்புடைய ஏட்டின் பிரகாரமான தொகை நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான தொகையுடன் இணக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | தேறிய உரிமைக் கோரல்கள் | 62,831,747 | 166,611,769 | 103,780,022 | தேறிய உரிமைகோரல்கள் செலுத்தப்பட்ட தொகை திரண்ட இலாபத்தில் சீர்செய்யப்படும். | -மேற்படி- |

### 1.5.4 கணக்காய்விற்கு ஆவணச்சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| | விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | திறைசேரி வைப்பில் இருந்து பெறப்பட வேண்டிய வட்டி | 67,154,145 | பெறுவனவுக்கான உறுதிப்படுத்தல் | இந்தத் தொகை 2013 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்பட்டு ள்ளதுடன் தடயவியல் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவர்களின் அறிக்கைக்காக காத்திருக்கிறோம். | மீதியை உறுதிப்படுத்துவ தற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான HNB அழைப்பு வைப்புக் கணக்கு மீதி | 13,428,928 | மீதியின் இருக்கும் தன்மையை உறுதிப்படுத்துவத ற்கான ஆவணம் | இது 2024 ஆம் ஆண்டில் சீர்செய்யப்படும். | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டி ற்கான பெறுமானத்தே ய்வு | 4,574,094 | கொள்வனவு செய்த திகதி, பயன்பாட்டிற்கு கிடைக்கும் திகதி அல்லது சொத்துக்களின் மீள்மதிப்பீட்டு திகதி | சொத்துக்கள் பதிவேடு 2021 ஆம் ஆண்டு வரை நாளதுவரையாக்கப்பட் டுள்ளதுடன் மிகுதி ஆண்டுகளிற்கான நாளதுவரையாக்கல் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது. | பெறுமானத்தேய் வு தொகையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 2,185,511 தொகையான பெறவேண்டிய நிதிச் சேவைகள் மீதான வற் நிதிக்கூற்றுக்களில் 6 ஆண்டு காலத்திற்கு மேலாக காட்டப்பட்டுள்ளது. | இந்த பெறவேண்டிய வற் தொகை கடந்த 6 ஆண்டுகளில் இருந்து வருகிறதால் IRD உடன் எமது ஏடுகளை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு எங்களுக்கு காலம் தேவைப்படுகிறது. 2024 ஆம் ஆண்டின போது நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கிணக்கம் செய்து மீதியை அறவிடுவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 முற்பணங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஏற்றுமதி விலைப்பட்டியல் கழிவிடல் வசதி மீது 08 ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 34,958,636 | இந்த தொகையை தடயவியல் கணக்காய்வாளர்களிடம் | நிலுவையாக உள்ள மீதியை கணக்கிணக்கம் |

| | | |
|---|---|---|
| தொகையான முற்பணம் 15 வருட காலமாக தீர்க்கப்படாமல் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 22,870,492 தொகை ஒரு ஏற்றுமதியாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. | கண்டறிவதற்கு கொடுத்துள்ளேன். | செய்து அறவிடுவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 15 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிச் சட்டத்தின் 21(2) ஆம் பிரிவு. | ரூபா 4,907,943,668 இற்கு கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளிற்காக கூட்டுத்தாபனம் நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டினையும் உரிய அமைச்சரின் அங்கீகாரத்தினையும் பெற்றிருக்கவில்லை. | பிஈடி வழிகாட்டல்களின் பிரகாரம் 30 பில்லியனுக்கும் குறைவான முதலீடுகளிற்கு நிதி அமைச்சிடம் இருந்து இணக்கப்பாடு பெறப்பட தேவையில்லை. | நிதிச் சட்டம் மற்றும் கூட்டுத்தாபன சட்டத்தின் பிரகாரம் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (ஆ) 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் கீழ் வெளியிடப்பட்ட கூட்டிணைந்த ஆளுகைக்கான வழிகாட்டல்களின் 4.3 ஆம் பந்தி | கூட்டுத்தாபனத்தின் வணிக நடவடிக்கைகளில் நிதி மற்றும் நிதியல்லாத இடர்களின் தாக்கத்தை கணிப்பிடுவதற்கும் பாதகமான தாக்கத்தை தணிப்பதற்கு தகுந்த நடவடிக்கைகளை எடுப்பதற்கும் இடர் குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | முறையான இடர் முகாமைத்துவக் குழு காணப்படாத போதிலும் பணிப்பாளர் சபை மாதாந்த சபைக் கூட்டங்களில் அனைத்து இடர்களையும் மதிப்பிடுகிறது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் கீழ் வெளியிடப்பட்ட செயற்பாட்டு கையேடு | | | |
| (i) 3.3 ஆம் பந்தி | மனித வளத் திட்டம் கூட்டுத்தாபனத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நாங்கள் SOR ஐ தயாரித்துள்ளோம், மேலும் அனைத்து தொழில் முன்னேற்றங்களும் அதில் இனங்காணப்பட்டுள்ளன. | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 3.4 ஆம் பந்தி | கூட்டுத்தாபனம் தொடர் திட்டத்தை தயாரித்திருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டம் | வாழ்க்கைச் செலவு படியாகவோ, வாழ்க்கைச் செலவுக்கான விசேட படியாகவோ அல்லது அதேபோன்ற படியாகவோ எடுக்கப்பட்டிருக்காத ரூபா 15,000 மற்றும் ரூபா 7,500 தொகையான படிகள் பணிக்கொடையை கணிப்பிடும் போது அடிப்படைச் சம்பளத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் நான்கு ஊழியர்களுக்கு பணிக்கொடையாக ரூபா 1,023,750 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளது. | 2023 ஒக்தோபர் முதல் 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தின் பிரகாரம் பணிக்கொடை கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. | பணிக்கொடையானது சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணிப்பிடப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 774,047,188 இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 528,910,150 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 245,137,038 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முதலீட்டு வருமானம் ரூபா 257,710,032 ஆல் அதிகரித்தமை மற்றும் வருமான வரி செலவினங்கள் ரூபா 99,236,757 ஆல் அதிகரித்தமைக்கு எதிராக நிதிச் சேவைகள் மீதான வற் ரூபா 85,864,474 ஆல் குறைவடைந்தமை என்பன இம் முன்னேற்றத்திற்கான பிரதான காரணங்களாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 815,810 கிரயத்தில் 05 வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு கூட்டுத்தாபனம் செய்தித்தாள் விளம்பரங்களை வெளியிட்டிருந்தது. எனினும், புதிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம் பத்திரிகை விளம்பரங்கள் தயாரிக்கப்பட்டிருக்காதமை பின்னர் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், இந்த நோக்கத்திற்காக கூட்டுத்தாபனம் மீண்டும் விளம்பரங்களை ரூபா 793,500 கிரயத்தில் வெளியிட வேண்டியிருந்தது. அதற்கிணங்க, முன்னர் மேற்கொள்ளப்பட்ட ரூபா 815,810 தொகையானது சிக்கனமற்ற செலவினமாக அவதானிக்கப்படுகிறது. | 2023 ஏப்ரல் அளவில் கூட்டுத்தாபனம் செயற்படும் கணக்குகள் பிரிவு அல்லது மனிதவள மற்றும் நிர்வாக பிரிவுகளைக் கொண்டிருக்கவில்லை. 2023 ஏப்ரலில் புதிய CMD நியமிக்கப்பட்ட பின்னர் SOR ஆனது MSD ஆல் அங்கீகரிக்கப்பட்டது. உள்ளீர்ப்பு மேற்கொள்ளப்பட்டதும் ஒக்தோபர் மாதத்தில் மாத்திரமே ஆட்சேர்ப்புக்கள் தொடங்கியது. இந்த குழப்பத்தின் போது இது இடம்பெற்றுள்ளது. | செலவினங்கள் சிக்கனமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 யூலை 04 இல் நடைபெற்ற பொது முயற்சிகள் குழு (COPE) முன்பு இடம்பெற்றிருந்த கூட்டுத்தாபனத்தின் முறைகேடுகளை கவனத்தில் கொண்டு அனைத்து வெற்றிடங்களையும் நிரந்தர அடிப்படையில் நிரப்புவதற்கு உத்தரவிட்டிருந்தது. எனினும், 2023 திசெம்பர் 31 வரையிலும் கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 21 பதவிகள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட 56 பதவியணியினரில் 2023 ஏப்ரல் அளவில் 19 ஊழியர்கள் மாத்திரமே இருந்தனர். அதில் 6 பேர் சிறிய ஊழியர்களாவர். நிதி பிரிவிலும், மனித வள மற்றும் நிர்வாக பிரிவிலும் யாரும் இருக்கவில்லை. ஏப்ரல் மாதத்திற்குப் பின்னர், நாங்கள் கூட்டுத்தாபனத்தில் SOR விடயத்தையும், ஆட்சேர்ப்புக்களையும் விரைவுபடுத்தினோம். SOR ஐ பெற்றிருந்த பின்னர் 2023 செப்தெம்பரிலேயே MSD இடமிருந்து உள்ளீர்ப்பு பரிந்துரைகளை மேற்கொள்வதை முகாமை செய்தோம். புதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு உள்ளீர்ப்பு மேற்கொள்ளப்படும் வரை நாங்கள் காத்திருக்க வேண்டியிருந்தது. | COPE பணிப்புரைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பௌதீக ரீதியாகவோ அல்லது டெலி/வெபினார் (tele/webinar) மூலமாகவோ மாணிக்கக்கல் மற்றும் ஆபரண ஏற்றுமதியாளர்களுடன் 06 கூட்டங்களையும் மற்றும் 20 புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் மற்றும் 04 மாகாணங்களில் தற்போதுள்ள SLECIC தயாரிப்புக்களை மேம்படுத்தும் திறன் மற்றும் ஏற்கனவே உள்ள ஏற்றுமதியாளர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் நடாத்துவதற்கு கூட்டுத்தாபனம் திட்டமிட்டிருந்த போதிலும் ஒவ்வொரு நடவடிக்கையிலும் ஒரு நிகழ்ச்சி மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. | பல ஆண்டுகளாக கூட்டுத்தாபனம் இலங்கையில் சாத்தியமான மற்றும் தற்போதுள்ள ஏற்றுமதியாளர்களுக்கு எந்தவொரு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் விளம்பரப்படுத்தியிருக்கவில்லை அல்லது நடாத்தியிருக்கவில்லை. இலங்கையின் ஏற்றுமதியாளர்களை இலக்கு வைத்து பயனுள்ள விளம்பரப்படுத்தலை நாங்கள் ஆரம்பித்துள்ளோம். தேயிலை வர்த்தகர்கள் சங்கம் (CTTA) மற்றும் இறப்பர் வர்த்தகர்கள் சங்கம் (CRTA) ஆகியவற்றுடன் இதனைத் தொடர நாங்கள் எதிர்பார்க்கிறோம்.<br><br>2023 ஆம் ஆண்டில் SLECIC ஆனது அதன் வரலாறில் ரூபா 1.2 பில்லியன் அதிகபட்ச மொத்த தேறிய வருமானத்தை அடைந்திருந்தது. மேற்படி சந்தைப்படுத்தல் முயற்சிகள் காரணமாக இதை நாங்கள் அடைய முடிந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் செயற்பாடுகள் பட்டியலிட்டவாறு அமுல்படுத்தப்பட வேண்டும். |